# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 165/2024 நாள்.25.11.25

PW1- திரு. ரவிசந்திரன் த/பெ. திரு. திருமேனி

5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1ஆம் பிரதிவாதி என் சகோதரர் என்றால் ஆமாம். 2, 3 பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி என் அம்மா என்றால் ஆமாம். என் அப்பா என்ன வேலை பார்த்தார் என்றால் போலிஸ் வேலை பார்த்தார். என் அப்பா போலிஸ் வேலை பார்த்துதான் இந்த சொத்து எல்லாம் வாங்கினார் என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதி என் சகோதரரின் மகன் என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதிக்கு என் அப்பா ஒரு வீடு எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் 6ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். என் அப்பா 5ஆம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தனிபட்ட சொத்து என்றால் இல்லை பாட்டி சொத்து. என் பாட்டி என்ன வேலை பார்த்தார் என்றால் மாடு வைத்து பால்வியாபாரம் செய்தார். என் பாட்டிக்கு நான் சொல்வதுபோல் எந்தவேலையும் கிடையாது என்றும், என் அப்பா போலிஸ் என்பதால் அவர் பெயரில் சொத்து வாங்காமல் பாட்டி பெயரில் சொத்து வாங்கினார் என்றால் இல்லை. என் பாட்டியின் சொத்து அவரின் இறப்பிற்கு பிறகு என் அப்பாவுக்கு வந்துவிட்டது என்றால் ஆமாம். அப்பாவுக்கு வந்தபிறகு வாரிசுதாரரார்களாகிய எங்களுக்கு அதிலிருந்து பங்கு கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். எங்களுக்கு கொடுத்தது போக அவருக்கு தேவையானதை அவர் வைத்துகொண்டார் என்றால் ஆமாம். அவருக்கு பாத்தியபட்ட சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதிகொடுக்க அவருக்கு உரிமையுள்ளது என்றால் உள்ளது. அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 5ஆம் பிரதிவாதிக்கு என் அப்பா திருமேனி எழுதி கொடுக்க உரிமையுள்ளது என்றால் உண்டு. 5ஆம் பிரதிவாதிக்கு என் அப்பா எழுதிகொடுத்த சொத்து அப்பா இறந்தபிறகு அவர் பெயருக்கு மாறிவிட்டதால் அதைபொறுத்து எழுதிகொடுக்க அவருக்கு உரிமைஉண்டு என்றால் உண்டு. 5ஆம் பிரதிவாதி 6ஆம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த சொத்தில் எனக்கு எந்தவிதமான பங்குமில்லை என்றால் பங்கு இல்லை. அவர் எழுதி கொடுத்த பங்கில் உரிமைகோர

உரிமையில்லை என்றால் உரிமைஉள்ளது. நான் சொல்வதுபோல் என் அப்பா என்னுடன் இல்லை என்றால் 2009லிருந்து 2018 வரை என்னுடன் இருந்தார். 2009க்கு முன்பு என் அப்பா ஏன் என்னுடன் இல்லை என்றால் என் அப்பா சொந்தஊரில் இங்கேயிருந்தார் நான் ஈரோட்டில் வேலை பார்த்தேன். எனக்கும் என் அப்பாவுக்கு சுமூகமான உறவு இல்லை என்றும் அதனால்தான் நான் குடும்பத்திலிருந்து பிரிந்துபோய் ஈரோட்டில் இருந்தேன் என்றும், 1ஆம் பிரதிவாதிதான் என்னை குடும்பத்தில் கொண்டுவந்து சேர்த்தார் என்றும் சொன்னால் இல்லை. 2009க்கு முன்பே என் அப்பாவை 1ஆம் பிரதிவாதிதான் பார்த்து வந்தார் என்றும் அதனால் சொத்தை ஏமாற்றி எழுதி வாங்கவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றால் சரியல்ல அப்பாவும், அம்மாவும் தனியாக இருந்தார்கள் அவர்களை யாரும் பார்க்கவில்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- பா.நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.